பக்கங்கள் 8

# ஈழநாடு
The Eelanaadu

60 சதம்

மலர் 22 புரட்டாதி 29 ஜுல்-கஜ் 5 இதழ் 246
யாழ்ப்பாணம் புதன்கிழமை 15 - 10 - 80

UNIVERSITY OF SRI LANKA JAFFNA CAMPUS
RECEIVED
1980-10-14
PERIODICALS DIVISION
LIBRARY

## 'எஸ்.டி.' கூற்றுக்கு பண்டிதர் மறுப்பு!

(யாழ்ப்பாணம்)

''யு. என். பி. பாராளுமன்ற உறுப்பினர்கள் விலைவாசி ஏறியுள்ளதால் மாதம் 3,000 ரூபாய் அலவன்ஸூம், 1,000 ரூபாய் மான்யமும் வேண்டுமென்று கோரி, ஜனாதிபதிக்கு சமர்ப்பித்துள்ள மகஜரில், கூட்டணி எம். பி.க்கள் கையொப்பமிடவில்லை. கூட்டணி எம். பி. க்கள் இம் மகஜரில் கையொப்பமிட்டதாக கும்பஹா எம். பி. திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா யாழ்ப்பாணத்தில் பேசி தவறான கருத்தைப் பரப்ப முற்பட்டது கண்டிக்

(8-ம் பக்கம் பார்க்க)

# வன்செயலை தூண்டுவோர்மீது அரசாங்கம் கடும் நடவடிக்கை!

## வேலை வங்கி நியமனம்: எந்த ஒரு எம். பி.க்கும் சலுகை அளிக்கக்கூடாது!

### திட்டமிடல் அமுலாக்க செயலாளர் அறிவிப்பு

(கொழும்பு)

''வேலைவங்கிமூலம் வேலை வாய்ப்புக்கள் வழங்கும்போது எந்த ஒரு எம். பிக்கும் சலுகைகள் வழங்கக்கூடாது. சகல தொகுதிகளுக்கும் சமசந்தர்ப்பம் அளிக்கப்படவேண்டும். இவ்வாறு திட்டமிடல்அமுலாக்கல் அமைச்சின் செயலாளர் டாக்டர் விக்கிரம வீரசூரியா சகல திணைக்களங்கள், அமைச்சுக்கள், சபைகள் கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றை பணித்துள்ளார்.

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் அனுமதியின் பேரிலேயே டாக்டர் விக்[illegible] பணிப்புரையை சுற்றுநிருபம் மூலம் விடுத்துள்ளார்.

தற்போது வேலையிவிருப்பவர்களுக்கு வேலைவங்கிமூலம் வேலை வழங்கக்கூடாது என்றும்—

ஏற்கனவே செய்ததுபோல் வேலையை எவரும் மாற்றிக் கொள்ள அனுமதிக்கக்கூடாது என்றும்—

வேலைவங்கிமூலம் முதலில் சமயாசமய ஊழியர்களே நியமிக்கப்படுவர் என்றும் சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## மதுபான நிலையங்களை மூட உத்தரவு

(யாழ்ப்பாணம்)

நாட்டிலுள்ள சகல மதுபான விற்பனை நிலையங்களையும் மூன்று தினங்களுக்கு மூடி வைக்குமாறு உத்தரவிடப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது. இதனால்நேற்றுப் பிற்பகலே பல இடங்களிலும் சாராயப் போத்தல்கள் துரிதமாக விற்பனையானதைக் காணக்கூடியதாகவிருந்தது.

## அவசியம் ஏற்பட்டால் அவசரகாலநிலை பிரகடனம்

### அரசு வெளியிட்ட அறிக்கை

(கொழும்பு)

**நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட; தேவை ஏற்படும் பட்சத்தில், பொதுசன பாதுகாப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.**

**அவசியமேற்படின், அவசரகாலப் பிரமாணங்களின்கீழ் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அரசாங்கம் முடிவுசெய்துள்ளது.**

இதுசம்பந்தமாக அரசாங்கம் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

### அரசு அறிக்கை

''கடந்த காலங்களில் பொதுக்கூட்டங்கள் [illegible]மாக நடைபெற அரசாங்கம் அனுமதிவழங்கியிருந்தது. ஆனாலும் சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தலைமையில் நடைபெற்ற கூட்டங்களில் கலந்துகொண்ட அவரது ஆதரவாளர்கள் பலர், வன்செயல்களைத் தூண்டக்கூடியமுறையில் உரைநிகழ்த்தியுள்ளனர்.

### 'வன்செயலுக்கு தூபம்'

''இரத்தம் சிந்தத் தயங்கக் கூடாது என்றும், வீதிகளில் வன்செயல்களில் ஈடுபடவேண்டும் என்றும், அக்டோபர் மாதம் பதினாறும் திகதி ஆயுதங்களுடன் கொழும்புக்கு வந்து; ஜனாதிபதியையும், பிரதமரையும் கொலைசெய்து, பாராளுமன்றக் கட்டிடத்தை தரைமட்டமாக்கவேண்டும் என்றும் வன்செயல்களுக்குத் தூபமிடும் கருத்துக்களை இக் கூட்டங்களில் அவர்கள் தெரிவித்துள்ளனர். இதன் மூலம் பாராளுமன்றத்துக்கு அங்கத்தவர்கள் வருவதை தடுத்து நிறுத்தவேண்டும் என்றும் இவர்கள் தமது உரைகளில் வலியுறுத்தியுள்ளதாக அரசாங்கத்துக்கு இப்பொழுது தகவல் கிடைத்துள்ளது.

### பலருக்கு விளக்கமறியல்

''இக்கூட்டத்தில் ஆற்றிய உரைகள் நாடாக்களில் ஒலிப்பதிவு செய்யப்பட்டுள்ளன. சட்டவிரோதமான முறையில் பொதுமக்களைத் தூண்டிவிட்ட காரணத்துக்காக, சம்பந்தப்பட்டபேச்சாளர்களுக்கு எதிராக நீதிமன்றநடவடிக்கை எடுத்து, வழக்குத் தொடருவது குறித்து அரசு பரிசீலனை செய்துவருகிறது. பொது இடங்களில் இப்படியாக உரையாற்றிய பலர் நீதிமன்றத்தில் ஆஜர்செயயப்பட்டு இப்பொழுது விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

''பொதுமக்களுக்குப் பூரண பாதுகாப்புவழங்கும்பொருட்டு அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை கொண்டுவர அமைச்சரவை முடிவுசெய்துள்ளது. குற்றவியல் சட்டக் கோவையின் நான்காவது அத்தியாயத்தின் கீழ் தேசவிரோதச் செயல் தண்டனைக்குரிய குற்றமாகும். இச் சட்டத்தின் கீழ் ஒருவர் குற்றவாளியாகக் காணப்பட்டால், அவருக்கு மரணதண்டனை வழங்கமுடியும். அல்லது இருபதுவருட கடூழியச் சிறைத் தண்டனையுடன், அவரது சொத்துக்களையும் பறிமுதல் செய்யமுடியும்'' என்று அரசாங்கம் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 'மக்கள் ஆணையை பெற வேண்டும்!'

(யாழ்ப்பாணம்)

''திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் குடியியல் உரிமைகளைப் பறிக்கலாமா பறிக்கக் கூடாதா என்றகொள்கையை முன்வைத்து மக்கள் ஆணையை ஐக்கிய தேசிய

(8-ம் பக்கம் பார்க்க)

ஹோம் பினன்ஸ்
லிமிட்.
82, கன்னாதிட்டி ரோட், யாழ்ப்பாணம்.
வருடாந்தம் ஆகக்கூடுதலான
25% வட்டியை
வழங்குகின்றது
ரூபா 1000/–க்கு மேற்பட்ட
எந்த முதலீட்டிற்கும்
மாதாந்தம் வட்டி வழங்கப்படும்
உங்கள் பணத்தை
விவேகமாக
முதலீடு செய்யுங்கள்
தலைமையகம்:
463, காலி வீதி, கொழும்பு-3.
தொலைபேசி : 89190

## அபடான் மீது ஈராக் இறுதித் தாக்குதலை ஆரம்பித்தது!

லண்டன், அக். 1

ஈரான்–ஈராக் யுத்தத்தில் ஈராக் தோல்வியுறுமானால் ஈராக்படைகளுக்குஇராணுவ உதவியளிக்க ஜோர்டான் தயங்காது என்று ஜோர்டான் மன்னர் ஹுசேன் மீண்டும் தெரிவித்துள்ளார்.

இதேசமயம் அபடான் நக[illegible] ஈராக்துருப்புக்கள் [illegible]துள்ளன என்று ஈராக் இராணுவ அறிக்கை ஒன்று தெரிவித்துள்ளது.

கடைசியாகக் கிடைத்த தகவல்களின்படி, அபுடானை சுற்றிவளைத்துள்ள ஈராக் துருப்புகள் அபுடான் மீது இறுதித் தாக்குதலை நடத்த ஆரம்பித்துள்ளது என்று தெரியவருகிறது. அபுடானுடன் ஈரானிய துருப்புகளின் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவித்தன.

இது இவ்வாறிருக்க, சர்ச்சைக்குரிய பிரதேசமான ஷட் அல்-அரப் நீரிணை வழியாக ஐ. நா. கொடியுடன் செல்லும் சகல வெளிநாட்டுக் கப்பல்களும் அனுமதிக்கப்படும் என்று ஈரான் ஜனாதிபதி ஜனப்பாணி சதர் அறிவித்துள்ளார்.

எனினும்இக்கப்பல்கள் ஈரான் துறைமுகங்களில் பொருட்களை இறக்கவோ ஏற்றவோ கூடாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். [இ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

பண்ணுகம் முறிவு நோய் வைத்தியர் திருமதி. மாணிக்கம் வீட்டுக்கு முன்பாகவுள்ள இராசா வீதியிலுள்ள திருமதி தையல் கணேசன் என்பவருக்கு சொந்தமான 5 பரப்புக் காணியும், வீடும் விற்பனைக்கு உண்டு. நேரில் வரவும். 7067

இரும்புப்பெட்டி இரண்டு (2) நல்ல ஒரிஜினல் திண்டுக்கல் உற்பத்தி. நேரில் பார்வையிடவும். பெண்ஸி ஜுவலர்ஸ், 74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 7049

எங்களிடம் இங்கிலாந்தில் இருந்து தருவிக்கப்பட்ட திறமான (Seagulla) நீலம் கையிருப்பில் உண்டு. தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். ஸ்ரீ கிருஷ்ணா றேடேஸ், 92 ஆஸ்பத்திரி றேட் யாழ்ப்பாணம். 7076

பதிவுசெய்யப்படாத டெலிக்கா வான், போட்வான் விற்பனைக்குண்டு. ராதா மெசின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 7084

## கல்வி

ஆறு வாரங்களில் மின்சார வேலை கற்று El ctrician டிப்புளோமா பெறுங்கள். பேசும் ஆங்கிலம் இலவசம். Jaffna Technical School (பதிவு 1956-ம் ஆண்டு) 53 (30), டேவிட் வீதி, குருநகர், யாழ்ப்பாணம். 7072

## தேவை

கண்ணுடித் தொழிற்சாலையில் கூலி வேலை செய்வதற்கு உடனடியாக ஆண்கள் தேவை. நாளொன்றிற்கு 15 ரூபாவரை சம்பளமாகக் கொடுக்கப்படும். நேரில் வரவும். சேவிகிளாஸ் அன்ட்மெட்டல்வேக்ஸ், நீர்வேலி. 7091

## காணி ஏலவிற்பனை

சங்கானை சுன்னுகம் பிரதான வீதியை தெற்கெல்லையாகக் கொண்டதும், தொட்டிலடிச் சந்தியில் இருந்து 300 யார் தொலைவிலும் நல்லகுடிபிருப்பு வசதியுள்ள "கம்பிமனை" என்னும் ஆதனம் பரப்பு நில. இலா. 8 ம் குளி 13½ யும் 25-10 80 சனிக்கிழமை மு. ப. 10 மணிக்கு ஏலத்தில் விற்கப்படும். மேற்கொண்ட விபரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்தில் தொடர்புகொள்ளவும்.

சி. செ. மாரிமுத்து, நீதிமன்றங்களின் விற்பனையாளரும், ஏலத்தரும்.

விதானை வளவு, சித்தங்கேணி.

10-10-80. 7095


# பயிர் காப்புறுதி 31ம் திகதி வரை

[புலோலி]

இலங்கைக் கமத்தொழில் காப்புறுதிசபை, விவசாயிகளிடமிருந்து இப்போகத்திற்கான கட்டுப்பணங்களை இம்மாதம் 31ம் திகதி வரை ஏற்றுக் கொள்ளும் என்றும், கட்டுப் பணங்களைப் பிரதேசபயிரிடல் உத்தியோகத்தரிடம் அல்லது கதநலச்சேவை நிலையத்தில் செலுத்தலாமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# இன்றைய பலன்

புரட்டாதி மாதம் 29-ம் திகதி

(புதன்கிழமை)

(15- 10 -1980)

மேடம்: குடும்பத்தில் திருப்திகரமான சூழ்நிலை தென்படும், கல்வித்துறையில் அதிக ஆர்வம் பிறக்கும், உத்தியோக உயர்வும் கிடைக்கும்.

இடபம்: சிந்தனைகளின் தாக்குதல் உங்களை சிந்திக்க வைக்கும், குழந்தை ஒன்றின் உடல்நலம் பாதிக்கப்படலாம், வைத்தியச் செலவிற்கு இடமுண்டு.

மிதுனம்: இனிமையான சம்பவங்கள் இடம் பெறும், பெரியோர்கள் ஆதரவு கிடைக்கும், களஸ்திரவழியால் நன்மைகள் கிடைக்கும், காதல் வானில் சஞ்சரிப்பவர்களுக்கு கனிவான நிகழ்ச்சிகள் உண்டு.

கடகம்: நம்பிக்கை மோசடி நடக்கும், நண்பர்களும் காலை வாரிவிடுவார்கள், தீர்க்கமான சிந்தையே சிறப்பைத் தரும்.

சிங்கம்: கனிவான நினைவுகள் மத்தியில் இன்று வாழ்க்கையை நடத்துவீர்கள், பெரியவர்களின் ஆதரவும் தாராளமாகக் கிடைக்கும், நிர்வாக உத்தியோகத்தர்களின் செல்வாக்கு இன்று வளர்பிறையாகும்.

கன்னி: பணம் தாராளமாகக் கிடைக்கும், கடமையாற்றும் இடத்தில் மேலதிகாரிகளின் செல்வாக்கைப் பெறுவீர்கள், சிலருக்கு அதிர்ஷ்ட தேவதையின் அணைப்பும் உண்டு.

துலாம்: பொருளாதார நிலை சீரடையும், மக்களால் மகிழ்ச்சிக்கும் இடமுண்டு, அதிர்ஷ்டலாபமும் கிடைக்கலாம், சகோதரவழியால் சுகமும் உண்டு.

விருச்சிகம்: இன்று எதிலும் நிச்சயமற்றநிலை தென்படும்' மனதில் விரக்தி மனப்பான்மை தலைதூக்கும், உணர்ச்சிவசப்படுவதால் வேண்டாத விளைவுகள் உருவாகும், மன அடக்கம் நன்று.

தனுசு: நாள்முழுதும் அலைச்சல், உடலில் நலிவு தோன்றும், பிணிக்கு இடம் கொடுக்காது சுகாதாரத்தைப் பேணி நடக்கவும், மனதின் அமைதி குன்றும்.

மகரம்: பேச்சில் நிதானம் இன்று பெருமையைத் தேடித்தரும், பிரச்சனைகள் பல இன்று நல்ல முடிவை அடையும், குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

கும்பம்: வெளியிடத்துப் பயணம் வேதனையைத் தரலாம், வேண்டாத உறவுகளைத் துண்டித்தல் நன்று, இன்று மட்டமான தினம்.

மீனம்: உறவுகள் பலப்படும், உள்ளத்தில் உவகை துள்ளும், உயர்வுக்கு வழி பிறக்கும், தாய்வழிமூலம் சிலருக்கு தனலாபமும் கிடைக்கும்.

சோதிடக்கலாநிதி

திருமலை

க. வேலுப்பிள்ளை

# நவராத்திரி

(நெல்லியடி)

கரணவாய் உச்சில் புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில், நவராத்திரி விழா நடைபெற்று வருகின்றது.

இம்மாதம் 18ம் திகதி சனிக்கிழமை ஸம்விருட்ச பூசையும், மானம்பூ உற்சவமும் நடைபெறவுள்ளது. (ச)

ஃ ஃ ஃ

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி ஆகியவற்றில் நவராத்திரி விழா நடைபெற்று வருகின்றது. தினமும் பூசைகள், நடைபெற்று இறுதி விழா இம்மாதம் 19ம் திகதி நடைபெறவுள்ளது. [அ]

# சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

லுணவில என்னுமிடத்தில் இழுக்கப்பட்ட 804-வது சுவீப் முடிவுகள்:

1-வது பரிசு

**24 S 0410**

ரூபா 1 லட்சம்

2-வது பரிசு

**18 N 0767**

ரூபா 40 ஆயிரம்

3-வது பரிசு

**16 L 0751**

ரூபா 10 ஆயிரம்

1725 ரூபா 30 சதம் கொண்ட ஆறுதல் பரிசு பெறும் 100 டிக்கட்டுகள் வருமாறு:-

02 A 0860 11 A 0812
21 A 0522
28 B 0273 32 B 0455
32 B 0560 33 B 0453
13 C 0547 15 C 0412
22 C 0896 30 C 0724
32 C 0449
16 D 0703
13 E 0504 22 E 0460
30 E 0840 33 E 0209
34 E 0237
03 F 0815 05 F 0096
07 F 0158 12 F 0682
23 F 0267 28 F 0590
08 G 0743 09 G 0172
23 G 0410 27 G 0898
02 H 0174 13 H 0475
02 J 0698 23 J 0095
25 J 0508 29 J 0388
31 J 0837
01 K 0057 07 K 0531
09 K 0247 12 K 0141
22 K 0360 22 K 1000
28 K 0130 29 K 0395
20 L 0163
06 M 0777 12 M 0363
16 M 0046 17 M 0876
26 M 0844
01 N 0250 01 N 0773
26 N 0110
23 O 0788 27 O 0083
33 O 0215
15 P 0127 15 P 0927
21 P 0211 26 P 0088
01 Q 0756 03 Q 0707
06 Q 0954 14 Q 0228
31 Q 0875 32 Q 0521
33 Q 0836
12 R 0639 17 R 0187
24 R 0433
01 S 0058 04 S 0391
06 S 0204 14 S 0258
02 T 0066 08 T 0930
17 T 0496 20 T 0190
04 U 0332 08 U 0718
09 U 0424 17 U 0891
23 U 0897 31 U 0294
34 U 0776
15 V 0852
07 W 0948 19 W 0235
05 X 0919 08 X 0291
09 X 0440 27 X 0719
33 X 0905
07 Y 0661 11 Y 0627
20 Y 0324 22 Y 0048
23 Y 0330 23 Y 0994
27 Y 0213
32 Z 0401

(இவை யாவும் உறுதிப்படுத்தப்படாதவை)



அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த காணி, காணி அபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திஸநாயக்கா மருதனுமடத்திலுள்ள 'அண்ணு' பாமுக்கு விஜயம்செய்திருந்தார். அங்கு அமைச்சருடன் 'அண்ணு' பாம் அதிபர் திரு. எஸ். நடராஜாவும், மில்க்வைற் அதிபர் திரு. கே. கனகராசாவும் படத்தில் காணப்படுகின்றனர்.

# வழுக்கையாறு ஆழமாகிறது

(பண்டத்தரிப்பு)

அளவெட்டி பிணுக்கைக் குளத்தில் உற்பத்தியாகி கந்தரோடை, சண்டிலிப்பாய், நவாலி ஆகிய இடங்களுக்கு ஊடாகச் சென்று அராலிக் கடலில்விழும்வழுக்கைஆற்றுப் படுகை ஆழமாக்கப்பட்டு வருகின்றது. நீர்ப்பாசனத் திணைக்களம் சுமார் இரண்டு இலட்ச ரூபா செலவில் இந்த ஆற்றுப் படுகையை ஆழமாக்கும் வேலைகளைச் செயல்படுத்தி வருகின்றது. மாரி காலத்தில் வீணுக்க் கடலில் சென்று விழும் நீரை இந்த ஆற்றுப் படுகையில் தேக்குவதன் மூலம் கோடை காலத்திலும் இப் படுகையை அடுத்துள்ள விவசாயக் காணிகளுக்கு நீர்ப்பாசன வசதி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)


## விசேஷ பயிற்சியாளர் (SPECIAL TRANEES) தேவை

கண்ணுடித் தொழிற்சாலையில் உள்ள மின்சார போறணையில் (Electric Furnace) வேலை பழகுவதற்கு பயிற்சியாளர்கள் தேவை. G. C. E. (A/L) சித்தியடைந்தவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

சேவி கிளாஸ் அன் மெட்டல் வேக்ஸ்,
நீர்வேலி: 7090


# அறிவித்தல்

## பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில்

சின்னையா ஐயர் சிவசாமிஐயர், அல்வாய்மேற்கு, அல்வாய்.

—வழக்காளி

வழக்குஇல. 380/3865.

எதிராக

1, வேலுப்பிள்ளை விநாயகம், அல்வாய் மேற்கு, தற்காலம் கனகபுரம், கிளிநொச்சி,
2. பொடிகாமிகே ஜினதாசா, மறுநாமம் பி. ஜி. ஜினதாசா, அல்வாய் தெற்கு, அல்வாய்.

— எதிராளிகள்

இவ்வழக்கில் வழக்காளி மனுவும் சத்தியக்கூற்றும் சமர்ப்பித்து மேற்குறித்த எதிராளிகள் 18-7-74ல் இவ் வழக்கில்தீர்த்துள்ள பின் அட்டவணையில் விபரிக்கப்படும் ஆதனத்தைபருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் பிஸ்கால் அட்சியொப்பம் எடுக்கும்பொருட்டு சென்றபொழுது தடைசெய்துள்ளாரென்றும் எனவே தடைசெய்த எதிராளிகளோ அல்லது வேறு எவரோ குறித்த ஆதனத்தில் உரிமைகோரின் அறிவித்தல் பிரசுரிக்கக்கப்பட்ட திகதியிலிருந்து 15 நாட்களுக்குள் தங்களுடைய உரிமைக் கோரிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டுமென்று இத்தால் அறிவிக்கின்ரேம்,

## அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வடமராட்சிப் பகுதி கட்டைவேலிக் கோயிற்பற்று அல்வாய் மாப்பாண குறிச்சியிறை 'கிளானை' நிபர, 38. இதில் நிபர. 33. இதில் நிபர. 10 குளி 8, 1/2. எல்லை

1. மேற்குப்புறமாக நிபர. 10 குளி 8, 1/2. எல்லை கிழக்கு சபாபதிப்பிள்ளை கிருஷ்ணபிள்ளைக்கும் மறுபேருக்குமுடையவாதனம், வடக்கு ரேட்டு, மேற்கு வயிரவியார் இராமுவுக்கும் மறுபேருக்குமுடையவாதனம், தெற்கு வல்லியப்பா வேதவனத்திற்குடையவாதனம். இவ்வெல்லைக்குட்பட்ட கிணற்றிலும், கிணற்றுப் பாவிப்புக்காக விடப்பட்ட நிலம் குளி நாலிலும் சொரியலாய் அரைவாசியும் மிகுதி நிலம் முழுவதும்.

2. தென்கிழக்குப் புறமாக நிபர. 6 குளி6. எல்லை கிழக்கு சபாபதிப்பிள்ளை மகள் நேசரத்தினத்திற்கும் மறுபேருக்குமுடையவாதனம், வடக்குவேலுப்பிள்ளை விநாயகத்துக்குடையவாதனம், மேற்கு சபாபதிப்பிள்ளை கிருஷ்ணபிள்ளைக்குடையவாதனம். தெற்கு வல்லியப்பா வேதவனத்திற்குடையவாதனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் முழுவதும் மேற்கூறியகிணற்றுப் பங்கும் வழி வாய்க்காலுரித்தும்.

1980-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 7-ந் திகதி.

மன்றின் கட்டளைப்படி

**வே. கணபதிப்பிள்ளை**

பிஸ்கால். 7089


## இறீசர் தேவை

சாவகச்சேரியில் புதிதாக திறக்கப்படவிருக்கும்
சேவிஸ் ஸ்ரேசனுக்கு
அனுபவமுள்ள
இறீசர் தேவை
விண்ணப்பங்களை தபாலில் அனுப்பவும்.
க. மகேந்திரராஜா,
கந்தையா வீதி, சாவகச்சேரி.
7083


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அபடான், கொரம்சர் நகரங்கள் எந்நேரமும் ஈராக் படைகளிடம் வீழ்ச்சி அடையலாம்

## பாரிய எண்ணெக் குழாய்கள் கொழுந்துவிட்டு எரிகின்றன

லண்டன், அக். 14

ஈரானுக்குள் வெகுவேகமாக முன்னேறிவரும் ஈராக் படைகள் முக்கிய எண்ணெ நகரான அபடானிலிருந்து ஓரிரு மைல் தொலைவு வரை நெருங்கிவிட்டதென்று ஈராக் தெரிவித்துள்ளது.

அபடான் நகரம் எந்நேரத்திலும் ஈராக் படைகளிடம் வீழ்ச்சியடையலாமென்றும் அந்நகரில் ஈராக் படைகளினல் சேதப்படுத்தப்பட்டபல பாரிய எண்ணெக் குழாய்கள் தீப்பற்றிக் கொழுந்துவிட்டு எரிகின்றன என்றும் ஈராக் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

'கொரம்சர்' துறைமுகநகரையும் அபடான் நகரையும் ஈராக் படைகள் நெருங்கிவிட்டன என ஈராக் தெரிவித்துள்ளதை ஈரான் மறுத்துள்ளது.

### ஈரான் கடல், விமானப்படைகள் முன்னேற்றம்

ஈரானிய கடல்படையும் விமானப்படையும் பல இடங்களில் முன்னேறிக் கொண்டிருப்பதாகவும் ஈரான் தெரிவித்தது.

### 10 ஈராக் துருப்புக்கள் பலி!

ஈரானிய துருப்புக்கள் நேற்று மேற்கொண்ட ஒரு தாக்குதலில் 10 ஈராக் துருப்புக்கள் பலியாகின என்றும் 19 பேர் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளவர் என்றும் ஈரான் அறிவித்துள்ளது. [இ]

### 8000 பேர் கைது!

சென்னை, அக். 14

தமிழ்நாட்டில் விலைவாசி உயர்வை எதிர்த்து அரசாங்க அலுவலகங்கள் முன்பாக மறியல்போராட்டம் நடத்திய சுமார் 8000க்கு மேற்பட்ட மார்க்ஸிஸ, கம்யூனிஸ்ட் தொண்டர்கள் பொலிசாரினல் நேற்று கைதுசெய்யப்பட்டனர்.

இவர்களுள் மார்க்ஸிஸ கம்யூனிஸ்ட் தலைவர்களும் அடங்கியிருந்தனர். மதுரை, திருச்சிறைப்பள்ளி, பழனி போன்ற இடங்களில் வைத்து இவர்கள் கைதுசெய்யப்பட்டனர். (வெ)

ஈரான் – ஈராக்

## யுத்தத்திற்கு அமெரிக்க கொள்கையே காரணம்

### அரபாத் குற்றச்சாட்டு

பெய்ரூத், அக். 14

''அரபு நாடுகளையும் அதன் எண்ணெவளங்களையும் தம் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வருவதே அமெரிக்காவினதும் மத்தியகிழக்கிலுள்ள அதன் நேச நாடுகளினதும் குறிக்கோள்''

இவ்வாறு பெய்ருத்தில் நடைபெறும் ''அரபு மக்களும் ஐரோப்பாவும்'' என்ற கருத்தரங்கில் கலந்துகொண்ட பிரதிநிதிகளுக்கு பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் ஜனுப் யாஸிர் அரபாத் விடுத்துள்ள செய்தியில் கூறப்பட்டுள்ளது.

அரபு எண்ணெவளங்களைக் கைப்பற்றித் தம்மாதிக்கத்தின் கீழ் கொண்டுவருவதற்காக அமெரிக்காவும் இஸ்ரேலும் எந்தவித நடவடிக்கைகளையும் செய்யத் தயங்கமாட்டா. ஈராக் — ஈரானிய யுத்தம் வெடித்ததற்கு அமெரிக்கா பாரசீகக்குடாவில் மேற்கொண்ட நடவடிக்கைகளே காரணம் என்றும் அவர் கூறினர்.

மத்தியகிழக்கில் அமெரிக்க இராணுவபலத்தை அதிகரிப்பதன் மூலம் சமாதானத்தை நிலைநாட்டமுடியாது. பலஸ்தீன மக்களின் சுயநிர்ணய உரிமை உட்பட அவர்களது

(7-ம் பக்கம் பார்க்க)

## சூரியமண்டலக் கொந்தளிப்பும் பயிர்களை அழிக்கும் பூச்சிகளும்

மாஸ்கோ, அக். 14

சூரியமண்டலத்தில் நிகழும் கொந்தளிப்புகளுக்கும் பயிர்களைக் காக்கும் பூச்சிகளின் அளவுக்கும், அதன்காரணமாக மகசூலின் அளவுக்கும் நேரடித் தொடர்பு இருப்பதாக உக்ரேனிய விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். 2) விதமான பூச்சிகளை விஞ்ஞானிகள் ஆராய்ந்து இவற்றின் அதிகரிப்புக்கும் சூரியமண்டலக் கொந்தளிப்புக்கும்நேரடித்தொடர்பு இருப்பதாகக் கண்டுபிடித்துள்ளனர். இதைக்கொண்டு, பயிர்களை அழிக்கும் பூச்சிகளின் பெருக்கத்தை முன்கூட்டியே கண்டுபிடிக்க முடியும்.

உலக நாடுகளின் உதவியுடன்

# ஈராக்-ஈரான் யுத்தத்திற்கு தீர்வுகாண இந்தியா முயற்சி

புதுடில்லி, அக். 14

மூன்று வாரங்களாக நடைபெற்றுவரும் ஈரான்-ஈராக் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும்முயற்சியில் இந்தியா தற்போது ஈடுபட்டுள்ளது.

சகல உலகநாடுகளுடனும் பேச்சுவார்த்தைநடத்தி அவற்றின் உதவியுடன் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும் தனது முயற்சியின் முதல்படியாக, இந்தியா உலக நாடுகளுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

இதேசமயம் ஈராக் - ஈரான் விசேட பிரதிநிதிகளுடன் இந்திய அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

தத்தமது நாட்டின் நிலை குறித்து அவற்றின் விசேட பிரதிநிதிகள் விளக்கம்அளித்த பின்னரே இந்தியா சமாதான முயற்சியில் ஈடுபட்டுள்ளது என்று புதுடில்லி செய்திகள் தெரிவித்தன. (இ)

## வலைக்களவைத் தடுக்க அதிகாரிதரும் ஆலோசனை

(மாவிட்டபுரம்)

'கடற்றொழிலாளர்கள் தமது கிராமங்கள் ஒவ்வொன்றிலும் கடற்றொழில் விரிவாக்க சேவைச் சங்கங்களை அமைத்து தம்மிடமுள்ள வலைகள் பற்றிய விபரங்கள் யாவற்றையும் அச்சங்கத்தில் பதிவு செய்துகொள்வதன் மூலம் தான் வலைக்களவுகளைத் தடுக்க முடியும்.'

இவ்வாறு யாழ். மாவட்ட மீன்பிடி விரிவாக்க அதிகாரி திரு. ஏ. பிலிப் ஊறணி எமிலியானுஸ் கனிஷ்ட வித்தியாலயத்தில் நடந்த வலைக்களவைத் தடுப்பது தொடர்பான மகாநாட்டில் பேசுகையில் கூறினர்.

வளலாய் தொடக்கம் சேந்தாங்குளம் வரையிலான 8 மீன்பிடிக் கிராமங்களில் வலைக்களவு அதிகரித்துவருவதால் அதனைத் தடுப்பதற்கான வழிமுறைகள் பற்றி ஆராய இம் மகாநாடு கூட்டப்பட்டது.

சங்கம் அமைத்து கூட்டுறவாக இயங்குவதால் இன்று அங்கு வலைக்களவுகள் நடைபெறுவதில்லை. இதே நிலை ஏனைய கிராமங்களிலும் ஏற்படவேண்டும்' என்ருர்.

சட்டத்தரணி அ. குமரகுரு பேசுகையில், 'வலைக்கள்ளரைக் கடற்றொழிலாளர்கள் இரகசியமாகப் பொலிசாருக்குத் தெரியப்படுத்தவேண்டும். பொலிசார் வலைக்கள்ளர் குறித்த பட்டியல் ஒன்றை வைத்திருக்கவேண்டும். இதன் மூலம் வலைக்கள்ளருக்குப் பயம் ஏற்பட்டு அவர்கள் களவில் ஈடுபடாத நிலை ஏற்படும்' என்ருர்.

காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அதிபர் திரு. லூஷன் விஜயக்கோன் பேசுகையில், வலைக்களவைத் தடுக்கப் பொலிசாரின் உதவி என்றும் உண்டு என்று கூறினர்.

இது [illegible] நடவடிக்கைகளை எடுக்க [illegible] தொடர்பு செய்யப்பட்டது. (அ)

அல்ஜீரிய பூகம்பம்:

## உலக நாடுகள் மேலும் உதவ வேண்டும்

### வால்ட்ஹெய்ம் கோரிக்கை

அல்ஜியர்ஸ், அக். 14

அல்ஜீரியாவில் நடைபெற்ற பயங்கர பூகம்பத்தினல் பாதிக்கப்பட்டவர்களுக்கு மேலும் உதவி வழங்குமாறு ஐ. நா. பொதுச்செயலாளர் டாக்டர் குர்த்வால்ட் ஹெய்ம் உலக நாடுகளைக் கேட்டுள்ளார்.

உலக நாடுகள் ஏற்கனவே அளித்த உதவியினல் நிவாரணப்பணிகளை ஓரளவு மேற்கொள்ள முடிந்ததுஎன்றும் மேற்கொண்டு நிவாரணப் பணிகளை மேற்கொள்ள மேலும் உதவி தேவைப்படுவதாகவும் டாக்டர் வால்ட்ஹெய்ம் உலக நாடுகளுக்கு விடுத்த செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (இ)

National

நெஷனல் மல்றி குக்கர்

உங்கள் எரிபொருள் செலவைக் குறையுங்கள்.

சோறு, கறிவகைகள், இரசம் முதலான உணவை முன்னிலும் பார்க்க வெகு விரைவாக சமைப்பதற்கு மல்றி குக்கர் பாவியுங்கள்.

சமைக்கும் உணவின் சுவை மாருதிருப்பதற்கு ஏற்றவாறு உருவமைக்கப்பட்டது இதனை இயக்குவதும் சுலபம்- அதாவது ''புஷ்பட்டன்'' முறை.



கிடைக்குமிடம்:

நெஷனல் காட்சியறை

84, மெயின் வீதி, கொழும்பு 11.

தொலைபேசி: 36259, 27970 மற்றும்

235, காலி றோட், கொழும்பு 4.

பிரதிநிதிகள்:

யுனி வோக்கர்ஸ் லிமிட்டெட்

விலை ரூ. 1090/

Mel Ads 662

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேஜர் சேர் ஜோனுக்கு நிரந்தர நினைவுச் சின்னம்

சிவனொளிபாத மலையின் மீது ஏறுகிறவர்கள் அங்கிருக்கும் மின்னொளி வசதியை ஏதோ சாதாரண விஷயமாகக் கருதுகிறார்கள். ஆனால் ஒரு காலத்தில் இந்தப்பாதையில் வெளிச்சமின்மை காரணமாக யாத்திரீகர்கள் பட்ட கஷ்டம் அனந்தம்.

இந்த மின்னொளி வசதிக்குப் பின்னணியிலிருந்து உதவியவர் வேறு யாருமல்ல, காலஞ்சென்ற சேர். ஜோன் கொத்தலாவலைதான் அவர்.

1924-ம் ஆண்டு சட்டசபை ஆட்சிக்காலத்தில் நோர்ட்டன் பிரிஜ் நீர் மின்திட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால் அபிவிருத்தி மிகவும் மந்தமாகவே இருந்தது. பல முட்டுக்கட்டைகளும் தடங்கல்களும் ஏற்பட்டு ஒரு கட்டத்தில் வேலைகள் முற்றாகவே கைவிடவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

1938-ம் ஆண்டில் இந்த வேலைகளை ஆரம்பிக்க கேள்விகள் கோரப்பட்டு இந்தியாவில் செயல்பட்டுவந்த ஒரு பிரிட்டிஷ் கம்பனியிடம் வேலைகள் ஒப்படைக்கப்பட்டன. ஆனால் உலக யுத்தம் தலையிட்டதால் ஒப்பந்தகாரர் வாபஸ் பெற்றுக் கொண்டார்.

1942-ல் அரசாங்க மின்சார திணைக்களம் வேலைகளைப் பொறுப்பேற்றது. ஆனால் வேலைகள் அதிகம் முன்னேறவில்லை. அதற்குள் 1947-ல் ஏற்பட்ட அசாதாரண மழையினாலும் மண்சரிவுகளினாலும் 22 தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.

இதன்பின்னர் தொழிலாளர்களும் பொதுமக்களும் இத்திட்டத்தில் ஏதோ தோஷம் இருப்பதாகக் கருதத் தலைப்பட்டனர். இதனால் வேலையும் தொடர்ந்து மந்தமாயிற்று. புதிய தொழிலாளர்களை அமர்த்துவதோ வேலைகளைத் துரிதப்படுத்துவதோ கஷ்டமாயிற்று.

இந்தக்கட்டத்தில்தான் சேர். ஜோன் இதில் தலையிட முன்வந்தார்.

சுதந்திரத்திற்கு முன் பதவியிலிருந்த காலஞ்சென்ற திரு. டி. எஸ். சேனநாயக்கா மந்திரி சபையில் போக்குவரத்து பொதுவேலைகள் அமைச்சராக இருந்த அவர் சில தொழிலாளர்களையும் சேர்த்துக் கொண்டு ஒரு சத்தியம்செய்தார். மேலும் இடைஞ்சல்கள் ஏற்படாதவகையில் திட்டவேலைகள் முற்றுப்பெறுமானால் சிவனொளிபாத மலைக்கு மின்னொளி வழங்குவது என்பதே அந்தச் சத்தியமாகும். இதன்பின்னர் தொழிலாளர் ஒழுங்காக வேலைக்குவர ஆரம்பித்தனர் வேலையும் முன்னேற்றமடைந்தது.

1950-ம் ஆண்டு மார்ச் மாதம் 4-ம் திகதி சிவனொளிபாத மலைக்கு மின்னொளி வழங்கப்படும் வைபவம் சிறப்பாக நடைபெற்றது. ஊர்வலமாக வந்த மக்கள், தலைவர்கள், பிக்குமார்கள், பொதுமக்

(5ம் பக்கம் பார்க்க)

— காமினி நவரத்தின —

### மணிவாக்கு

கடவுளை அடைவதற்கு ஒருவனுக்கு சில அனுகூலங்கள் வாய்க்க வேண்டும். சாதுக்களுடைய சத் சங்கம், விவேக இயல்பு, உண்மையான குருவின் ஆசிகள்-இவை கிட்ட வேண்டும்.

—ஸ்ரீ ராமகிருஷ்ணர்.

## நமது நோக்கு

### 'நைஜீரிய' நிபுணர்கள்

நாட்டை விட்டுத் தொழில் புரிவதற்கு வெளியேறும் எமது மக்கள் போகாத நாடு உலகில் ஏதும் உண்டா என்பது சந்தேகம். தூர மேற்கு அமெரிக்கா தொடக்கம் தூரகிழக்குஜப்பான் வரையும் ஐந்து கண்டங்களிலும் உள்ள எந்த நாட்டிலும் ஒரு இலங்கைப் பிரஜையாவது தொழில்புரிந்து கொண்டிருப்பாரென்பதுமிகையாகாது

அண்மையில் ஆரம்பமான படையெடுப்புமத்திய கிழக்கையே நாடிற்று. எண்ணெய்ச் செல்வம் கொழிக்கும் அரபுநாடுகளில், எண்ணிறந்த இலங்கையர் ஆண்களும் பெண்களும் பல துறைகளில் வேலைபெற்று, பெருஞ் சம்பாத்தியத்தைத் தேடமுடிகிறது. யுத்தம் தொடங்கியும், பலர் இன்னும்பயமற்று தங்கள்தங்கள் தொழிலிலே ஈடுபட்டிருக்கின்றனர்.

ஐரோப்பாவிலேபிரான்ஸ் ஜெர்மனி போன்றதொழில் விருத்தியில் சிறந்த நாடுகளிலும் நகரங்களிலும் சொற்ப ஆங்கில அறிவுடன் பல இலங்கை இளைஞர்கள் தொழில் வாய்ப்பு மூலம் நல்ல சம்பளம் பெறுகின்றனர்.

கப்பற் துறையிலும், எமது இளைஞர்கள் அற்ப தொழில் நுட்ப அறிவுடன் சேர்ந்து நல்ல பயிற்சி பெற்று பெருஞ் செல்வர்களாக நாடுதிரும்புகின்றனர். பலவித ஆபத்துக்கள் மத்தியில், பெருமளவில் இவர்களின் சாதனை மெச்சத் தக்கது.

இது காறும் நாம் குறிப்பிட்ட வர்க்கத்தினர் சாதாரண படிப்பை முடித்தவர்களும், அரைகுறையாக சிரேட்ட பாடசாலை வாழ்க்கையை முடித்தவர்களும், எவ்வித ஆங்கிலப் படிப்பற்ற சாதாரண தொழில் நுட்பத் திறமை வாய்ந்த யந்திர வேலையாட்களுமே.

இவ்வித ஆயிரக்கணக்கானோருக்கு வெளிநாடுகளே நல் வாழ்வு அளிக்கின்றன. யாழ்ப்பாணத்திலே குறிப்பாக எத்தனை வறிய குடும்பங்கள் இவர்களின் உழைப்பால் 'கஞ்சி' குடிக்கின்றனர் அதுமட்டுமல்லசீதனவியாதி நாளுக்கு நாள் மோசநிலை அடைந்துவரும் இப்பகுதியில் இதற்குத் தீர்வுகாண இந்த இளைஞர் பல குடும்பங்களில் விவாகமாகாத சகோதரிகளுக்கு அளப்பரிய உதவியளித்து வருகின்றனர்.

இந்தக் கூட்டத்தினர் பற்றி எவ்வித விவாதமும் ஏற்படவில்லை. இவர்களைப் போற்றுவாருமில்லை; தூற்றுவாருமில்லை. எங்கள் மக்களின் பொதுமனப்பாங்கை ஆராய்ந்தால், தூற்றுவிட்டால் அது போற்றுதல் என்று கொள்வது சரிபோல் தெரிகின்றது.

பெருமளவில் படித்தவர்கள்; பட்டதாரிகள், பெரும் உத்தியோகத்தர்கள், மருத்துவம், பொறியியல், கணக்கியல், ஆகிரியத்தொழில் போன்ற துறைகளில் எங்கள் நாட்டில் சேவையாற்றும் பெரும்புள்ளிகள் நைஜீரியா போன்ற தேசங்களிலுள்ள பல நாடுகளில் தொழில்பெற்று நாட்டைவிட்டுச்சடுதியில்வெளியேறுகின்றனர். இதனை 'நிபுணர் வெளியேற்றம்' என்று ஆங்கிலத்தில் குறிப்பிடப்படுகிறது.

இந்த வியாதி எங்கள் நாட்டுக்கு மட்டும் உரியதல்ல; ஆங்கில நிபுணர்கள் பொருள்தேடி அமெரிக்கா செல்கின்றனர். ஆசிய நிபுணர்கள் பொருள்தேடி இங்கிலாந்து செல்கின்றனர். இலங்கை நிபுணர்கள் ஆபிரிக்க நாடுகளுக்கு பெருமளவில் செல்கின்றனர். இந்தியா, பிலிப்பைன்தீவுகளிலிருந்து டாக்டர்கள் பொருள்தேடி இலங்கைவருகின்றனர்.

"இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை," என்று நாம் சொல்வதற்கில்லை. அடிப்படையில் இதுபொருளாதாரப்பிரச்னையே! இதை மறந்து நாம் சாதாரணசங்கடங்களுக்கு அசாதாரண ஆராய்ச்சியில் இறங்குவது அர்த்தமற்ற செயலாகும்.

ஆங்கிலம் படித்தவர்களுக்கு காலனி ஆட்சியில் மலேசியாவில் எவ்வளவு கிராக்கியிருந்தது. இலங்கையிலிருந்து ஆயிரக்கணக்கானோர்-பெருமளவில் யாழ்ப்பாணத்தவரே வெளியேறி அந்த நாட்டைத் திறம்பட வளம்பட நிர்வகிக்க உதவினர். அவர்களின் உழைப்பால் நாம் எவ்வளவில் வளர்ச்சி யடைந்தோமென்பதை மறந்துவிடலாகாது.

எனவே எங்கள்பாடசாலைகள், மருத்துவசாலைகள், பொறியியல் சேவை முதலியன இவர்களின் வெளியேற்றத்தால் தடைப்படுகின்றதென்று சொல்வது தப்பு. இவர்களின் உழைப்பு எங்கள் நாட்டுக்கு நன்மையளிக்கும் இவர்கள் தம் தாய் நாட்டில் ஆவல் கொள்ளக் கூடிய வாய்ப்புக் கிடைக்கும். தனிப்பட்ட முறையில் தேடுஞ் செல்வத்தை இங்குள்ள குடிநிலங்களில் புதைக்காமல், சமூகத்துக்கு நன்மை பயக்கும் நல்ல பொதுத்திட்டங்களில் முதலீடு செய்வார்களானால் அது பெரும் தேசியசேவையாகும்.

அது என்னவானாலும், "நீங்கள் போய்வாருங்கள், அந்த நாடுகளைத் திருத்த உதவுவதுடன் அகிலஉலகையும்சுற்றிப்பார்த்து, பிறந்த பொன்னாட்டில் சிறந்தது வேறெதுவுமில்லை என்ற முடிவுக்கு வருவீர்கள் என்று வழியனுப்புவதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

## மக்கள் கருத்து

### ஆறுகால் மடம்

அழிந்தும் அழியாத நிலையில் சர்ச்சைக்குள்ளாக்கப்பட்டுள்ள ஆறுகால்மடம் தோற்றுவிக்கப்பட்ட காலம் அதன் உபயோகம் எல்லாம் இப்பகுதியில் வாழும் மக்களுக்கு மட்டுமல்ல பிறபகுதியில் வாழும் மக்களுக்கும் தெரிந்த உண்மை.

கிட்டத்தட்ட 300 ஆண்டுகளுக்குமுன் ஒரு முஸ்லிம் பெரியாரால் மடமும் மடத்தை உள்ளடக்கிய சுமார் 9 பரப்பு நிலத்தில் பொதுக்கிணறு, சுமைதாங்கி, மாடுரஞ்சிக் கல்லு? தண்ணீர்த் தொட்டி போன்ற சகலவசதிகளையும் உள்ளடக்கிய வண்ணம் அன்பளிப்பாக விடப்பட்டது. தற்போது மடமும் மற்றயகிணறு, சுமைதாங்கி போன்றவையை விட மிகுதி நிலத்தை தனிப்பட்டவர் குடியிருப்பு நிலமாக்கியுள்ளார்.

மேற்படி மடத்தை இர

(5-ம் பக்கம் பார்க்க)

## உள்ளமாம் கமலம் மீது உறைந்திருந்தாயே!

"வெள்ளையாய் அணிகள் பூண்டு
விண்ணவர் போற்ற மக்கள்
உள்ளமாம் கமலம் மீது
உறைந்திடும் தாயே! அன்னார்
கள்ளமாம் அஞ்ஞானத்தைக்
கருவறுத் துயர்ந்த ஞானத்
தெள்ளமு தளிப்பாய்! உந்தன்
சேவடி போற்றி னோமே"

"வாக்கினில் வன்மை தன்னை
மனதினில் வாய்மை தன்னை
நோக்கினில் தூய்மை தன்னை
நுண்ணறி வாற்றல் தன்னை
நாக்கினில் நன்மை தன்னை
நல்லருள் ஞானந் தன்னை
ஆக்கிடுந் தாயே! உந்தன்
அருட் பதம் போற்றினோமே"

-பொன் ஐயாத்துரை-சிவசாமி

∴ ∴ ∴

## பின்னைஓர் தெய்வம் வேண்டாம்

அன்னையே தெய்வ மென்றாள்
அன்னையே தெய்வ மானாள்
முன்னையோர் சொன்ன வார்த்தை
மூவருந் தெய்வ மென்றார்
அன்னவர் சக்தி மூன்றும்
அவனியில் தெய்வ மானார்
பின்னையோர் தெய்வம் வேண்டாம்
பிறப் பிணி அறுப்பதற்கே.

முருக வே. பரமநாதன்

## நாடும் நடப்பும்

பதவிபோனபின் தான் பலருக்கு ஞானம் பிறப்பதுண்டு!

திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் குடியுரிமையைப் பறிப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளை எதிர்த்து வட பிராந்திய சுதந்திரக் கட்சிக் கிளையினரால் யாழ் நகரில் நடாத்தப்பட்ட கூட்டத்தில் கம்பஹா எம். பி. திரு. எஸ். டி. பண்டாரநாயகா பேசுகையில் திருமதி சிறிமா பண்டாரநாயகா 1983ம் ஆண்டில் மீண்டும் ஆட்சிக்குவந்தால் பழைய பண்டா-செல்வா ஒப்பந்தத்தின் ஷரத்துக்களை அமுல் நடத்துவாரென்றும் இதை நிச்சயமாக நம்பலாமென்றும் கூறியிருக்கிறார்.

ஏழு வருடங்கள் திருமதி சிறிமா ஆட்சியிலிருந்தபோதே பண்டா—செல்வா ஒப்பந்த ஷரத்துக்களை அமுல்செய்திருக்கலாம்.

1972ம் ஆண்டு புதிய குடியரசு அரசியலமைப்பு உருவாக்கப்பட்டபோதே பண்டா செல்வா ஒப்பந்த ஷரத்துக்களை அதில் சேர்த்திருக்கலாம்.

கடைசி ஐக்கியமுன்னணியிலிருந்து சமசமாஜக் கட்சியினர் வெளியேற்றப்பட்ட பின்பு தமிழ்ப்பிரதிநிதிகளையும் பின்னர் தமிழர்விடுதலைக்கூட்டணித் தலைவர்களையும் அழைத்து தமிழரின் பிரச்னைகள்பற்றிக் கேட்டறிந்து அவர்களுடைய ஆதரவைத் திரட்ட முயன்ற சமயத்திலாவது பண்டா-செல்வா ஒப்பந்த ஷரத்துக்கள் அமுல்செய்யப்படுமென்று அறிவித்திருக்கலாம்.

தமிழர்விடுதலைக் கூட்டணி உருவானதும் ஆறு அம்சக் கோரிக்கையைக் கொண்ட மகஜர் ஒன்றை அன்றைய பிரதமர் திருமதி சிறிமாபண்டாரநாயகாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இதைஅனுப்பிய தந்தை செல்வா இந்த ஆறு அம்சக் கோரிக்கை சம்பந்தமாக நேரில் சந்தித்துப் பேசி விளக்கம் தரவும் தயாராக இருப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

இதற்குப் பிரதமர் சிறிமாவிடமிருந்து கிடைத்த பதில் "மகஜர் கிடைத்தது" என்பது மட்டுமே!

இதைப்பற்றிக் கூட்டணியினர் பின்னர் கூட்டங்களிலும் அறிக்கைகளிலும் சுட்டிக்காட்டினர்!

ஆறு அம்சக்கோரிக்கை சம்பந்தமாகக் கூட்டணித்தலைவர்களை அன்றே பிரதமர் சிறிமா அழைத்துப் பேசியிருந்தாலும் பண்டா—செல்வா ஒப்பந்த ஷரத்துக்களை அமுல்நடத்தியிருந்தாலும்—

இன்று தமிழ்ஈழக் கோரிக்கை இந்த அளவுக்கு வந்திருக்காதே!

"கண்கெட்டபின் சூரிய நமஸ்காரம்" என்பதுபோல குடியுரிமைக்கே ஆபத்து வந்துள்ளசமயத்தில் 1983ம் ஆண்டில் திருமதி சிறிமா மீண்டும் ஆட்சிக்கு வந்தால் பண்டா—செல்வா ஒப்பந்த ஷரத்துக்கள் அமுல்நடத்தப்படும் என்று கூறுவதும்!

0 0 0

எப்படியிருந்தாலும் குடியுரிமையைப் பறிக்கும் நடவடிக்கைகளை எதிர்த்து நடைபெறும் கூட்டங்களில் கூட்டணி எம். பி. ஒருவராவது கலந்துகொண்டுபேசுவது

"இன்னா செய்தாரை
ஒறுத்தல் அவர் நாண
நன்னயஞ்செய்துவிடல்"

என்ற வள்ளுவர் வாக்குக்கு ஏற்பாக இருக்குமே!

- ஊர்சுற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று
# வெள்ளைப்பிரம்பு தினவிழாவும் பொருட்காட்சியும்

(யாழ்ப்பாணம்)

யாழ். விழிப்புலனற்ரோர் சங்கத்தால் நடாத்தப்படும் வருடாந்த சர்வதேச வெள்ளைப் பிரம்புத்தின விழாவும் பொருட்காட்சியும் இன்று பிற்பகல் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தெல்லிப்பழை லயன்ஸ் கழகத்தின் ஆதரவுடன் நடாத்தப்படும் இவ்விழா விழிப்புலனற்ரோர் சங்கத் தலைவரும் சட்டத்தரணியுமான திரு. க. வே. மகாதேவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளும் இவ்விழாவில், யாழ். சமூக சேவைப் பகுதி உதவிப்பணிப்பாளர் திரு. க. கெங்காதரன், மகாஜனக்கல்லூரிஅதிபர் திரு. பொ. சோமசுந்தரம், சுன்னுகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. பொ. சுகுணேந்திரன், நபீக்ட் பாடசாலை அதிபர் திரு. ஜே. எஸ். டேவிட், தெல்லிப்பழை லயன்ஸ் கழகத் தலைவர் திரு. சி. எஸ். சுப்பிரமணியம், சட்டத்தரணி திரு. மு. திருநாவுக்கரசு ஆகியோர் உரையாற்றுவார்கள்.

அன்று பிற்பகல் தெல்லிப்பழைச் சந்தியிலிருந்து வெள்ளைப் பிரம்பு ஊர்வலம் ஆரம்பமாகவுள்ளது. இதற்கான வெள்ளைப்பிரம்பை தெல்லிப்பழை லயன்ஸ் கழகம் வழங்கவுள்ளது.

விழிப்புலனற்ரோர் கல்வி முறைபற்றிய கண்காட்சியை யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. க, சிவநாதன் ஆரம்பித்துவைப்பார். (கொ)

## மேஜர்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

கள் ஆகியோர் முன்னிலையில் அடிவாரத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த மகர தோரணத்தை சேர் ஜோன் அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். அதன் பின்னர் மலை உச்சியை நோக்கி ஊர்வலம் புறப்பட்டது. மலையின் உச்சியை அடைந்ததும் சிவனொளி பாத மலைக்கு மின்னொளி வழங்கும் நிகழ்ச்சியை சேர் ஜோன் ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சி பற்றி சரித்திர ஆராய்ச்சியாளரும் சேர் ஜோனின் நண்பருமான திரு. ஜோன் எம். செனவிரட்ன என்பவர் தமது சிறு நூல் ஒன்றில் விபரமாக வர்ணித்துள்ளார்.

மகாவம்சத்தில் குறிக்கப்பட்டுள்ள சிங்கள அரசர்களின் சிவனொளிபாதமலை யாத்திரைகள் பற்றி திரு. செனவிரட்ன தமது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த அரசர்கள் காலத்துக்குக் காலம் சிவனொளிபாத யாத்திரையிலுள்ள சிரமங்களைக் குறைப்பதற்காக பாலங்கள் அமைத்தும், கற்பாறைகளில் படிகள் வெட்டியும், இரும்புச் சங்கிலிகளைக் கட்டியு, தங்கு மடங்களை நிர்மாணித்தும் பணிபுரிந்திருக்கிருர்கள். இந்த மலைக்கு கடைசியாக யாத்திரை சென்ற அரசன் கீர்த்திசிறிராஜசிங்காவாகும்.

பிரிட்டிஷார் ஆட்சிக்கு வந்தகையோடு இந்த யாத்திரைஸ்தலம் தொடர்பான அபிவிருத்தி வேலைகள் எதுவும் நடைபெறவில்லை. அவ்வாறு செய்யப்பட்டிருந்தாலும் குறிப்பிடக் கூடியதாக எதுவும் இருக்கவில்லை. இந்த நிலைமை சுமார் ஒன்றரை நூற்றுண்டு காலம் நீடித்தது. இதனுல் ஏற்கனவே நிர்மாணிக்கப்பட்டிருந்த பாறைகளும், தங்கு மடங்களும் கவனிக்கப்படாமல் பழுதடைய நேர்ந்தது. இந்த நிலைமையில் சிவனொளி பாதத்துக்குச் செல்லும்வழிக்கு மின்சார ஒளி வழங்குவதான சேர் ஜோனின் திட்டம் ஒப்புவமையற்றதொரு பணியாகும் என்று திரு. செனவிரட்ன குறிப்பிட்டுள்ளார்.

மின் ஒளி ஏற்றும் வைபவத்தில் பேசிய சேர் ஜோன் கொத்தலாவலை, இந்த நாட்டின் சுபீட்சத்தையொட்டி நோர்ட்டன் பிரிஜ் நீர் மின் திட்டத்தை அமைக்க தம்மை அர்ப்பணித்துப் பணியாற்றிய தொழிலாளர்களையும், ஊழியர்களையும் இனி ஆண்டுதோறும் இங்கு வந்து வழிபடவிருக்கும் யாத்திரிகர்கள் நினைவுறுத்திக் கொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன் என்ருர்.

நோட்டன் பிரிஜ் மின்சாரத் திட்டமும் சிவனொளிபாதத்துக்கு மின்சாரம் வழங்கிய பணியும் சேர் ஜோனுக்கு இந்த நாடு ஏற்படுத்தியுள்ள நிரந்தரமான ஞாபகச் சின்னங்கள் என்ருல் மிகையாகாது.

# "வாசிகசாலையை 8 மணிவரை திறக்கவும்"

[சுழிபுரம்]

சுழிபுரம் கிராமசபைநடாத்தும் வாசிகசாலையை தினமும் முற்பகல் முதல் இரவு எட்டு மணிவரை திறந்து நடாத்துமாறு வரியிறுப்பாளர்கள் விசேட ஆணையாளரை வேண்டியுள்ளனர். தற்போது பிற்பகல் மட்டும் திறந்து இருப்பதால் நேரம் போதாமையும் ஏற்பட்டுள்ளது. இடநெருக்கடியும் பத்திரிகை பார்ப்பவர் தொகை அதிகரித்துமிருக்கிறது.

தற்போது பத்திரிகைகளின் விலைஅதிகரித்துள்ளதால் பொதுவாசிகசாலையை நாடும் மக்கள் தொகை அதிகரித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## இன்று
# சரஸ்வதி விழா

(யாழ்ப்பாணம்)

வடபகுதி தபாற் திணைக்கள ஊழியர்கள் சரஸ்வதிவிழாவை இன்று புதன்கிழமை மாலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடாத்தவிருக்கின்றனர்.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி சொற்பொழிவாற்றுவார். பரதநாட்டியம், நகைச்சுவை போன்ற கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறவிருக்கின்றன. [ஈ]

## ஆறுகால்....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வோடு இரவாகத் தமது சொந்த விருப்பத்திற்கும், சுயதேவைக்காகவும், நகராளுமன்றத்தின் அமைதியின்றிஉடைத்தெறியப்பட்டுள்ளதைப் பார்க்கின்றபோது சம்பந்தப் பட்டவர்களின் தான் தோன்றித்தனமானப் போக்கை காணக் கூடியதாய்உள்ளது.

பொதுமக்களுக்கு நன்மைபயக்கும் ஒரு மடமும் சுற்றுடலும் ஒரு சிலரின் ஆளுகைக்குட்பட்டு அவர்களின் அபிலாஷைக்கும் சுயதேவைக்கும் பலியாகாமல் இருக்க முதல்வர் பார்த்துக் கொள்வதோடு "ஆறுகால்மடம் புனர் நிர்மாணிப்புக் குழு" இப்பகுதிப் பெரும்பாலான பொதுமக்களை உள்ளடக்கியுள்ளதுடன் உண்மையான கையொப்பங்களுடன் கூடிய மகஜரை முதல்வருக்கு சமர்ப்பித்துள்ளதை சுட்டிக்காட்டுவதோடு இவ்விடயத்தில் முதல்வர் பொதுமக்களின் கோரிக்கைக்கு செவிமடுத்து நீதிவழங்குவார் என எதிர்பார்க்கின்ஞேம்.

**வே. அப்பையா**
ஆறுகால் மடம்

# "சுதந்திரத்திற்குப் போராடுகையில் அபிவிருத்தியால் பயனில்லை"

(மாவிட்டபுரம்)

"சுதந்திரத்திற்காக போராடும் இனம் தனது சுதந்திரத்தைப் பெறுவதற்கு முன் அபிவிருத்தி பற்றிப் பேசுவதில் அர்த்தமில்லை. சுதந்திரத்தைப் பெறப் போராட வேண்டிய நிலை ஏற்படும்போது அபிவிருத்திகள் எல்லாம் வீணுகும் நிலை ஏற்படும்" என்று குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்க முன்றலில் நடந்த மாவட்ட அபிவிருத்திச் சபையைபும்தமிழர்விடுதலை உணர்வும்" என்னும் தலைப்பிலான கருத்தரங்கில் பேசிய கோவை மகேசன் கூறினுர்.

திரு. பி. சிவராஜா தலைமையில் நடந்த இக்கருத்தரங்கில் அவர் மேலும் பேசுகையில் "தமிழ் ஈழத்திற்கும், அபிவிருத்திச் சபைகளுக்கும் தொடர்பில்லை எனக்கூறும் தலைவர்கள் புதிய அரசியலமைப்பு வந்தபோது அதனை எதிர்த்துப் பகிஷ்கரித்ததுபோலஇதிலுநடந்திருக்கலாம். இவர்கள் மாவட்ட அபிவிருத்திசபையை ஆதரித்ததால்தான் பிரதமர் அமெரிக்கா சென்று துணிவாகப் பேச முடிந்தது" என்ருர்.

திரு. ஈழவேந்தன் பேசுகையில், "மாவட்ட அபிவிருத்தி சபை மூலம் 15 அதிகாரங்கள் எம்மிடம்வந்தாலும் அரசாங்க பொதுக் கொள்கைக்கிணங்கவே செயல்படும் எனக் கூறப்படும் இச்சபைகளால் என்ன பயன் ஏற்படப்போகிறது. தமிழருக்கெனப் பாரம் பரிய பிரதேசம் இல்லை யென்பதை ஜே. ஆர். கண்டி பாதயாத்திரை தொடக்கம் இன்று வரை வலியுறுத்தி வந்திருக்கிருர். ஆகவேஅவரால் கொண்டு வரப்பட்ட இச்சபைகளால் குடியேற்றத்தைத் தடுக்கலாம் எனக் கூறுவது விந்தையாக இருக்கிறது" என்ருர்.

மற்றும் டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கம், அ. குமரன், எஸ் கனகலிங்கம், எஸ். பி. இறைகுமாரன், பொன் பூலோகசிங்கம் ஆகியோரும் பேசினர்.

இக்கூட்டத்தில் இரு தடவைகள் கல் எறியப்பட்ட போதும் எவரும் காயப்படவில்லை. கருத்தரங்கு அமைதியாக நடந்தது. (அ)

# சாந்தி கூட்டம்: தடை நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த மாதம் 22ம் திகதி நடைபெறவிருந்த சாந்தி கூட்டம்; ஒரு பங்காளரான திரு. ஆர். திருச்செல்வத்துக்கு அறிவித்தல் கொடுக்காமல் கூட்டப்பட்டதைத் தொடர்ந்து கூட்டத்தை தடைசெய்யுமாறு கோரி தாக்கல்செய்திருந்த வழக்கில் பதில் நீதிபதி, குறிப்பிட்ட வருடாந்த கூட்டத்தை நடத்த தடைவிதித்து, இம் மாதம் 15ம் திகதிவரை ஒரு கட்டாணைபிறப்பித்திருந்தார்.

இத்தடை உத்தரவை ஆட்சேபித்து கம்பெனியால் தாக்கல்செய்யப்பட்ட வழக்கு, நேற்று மாவட்ட நீதிபதி திரு. கே. பாலகிட்ணர் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது. விசாரணையின் பின்னர், மேலும் விசாரணை நவம்பர் மாதம் 24ம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டு, முன்னர் இட்ட கட்டாணையையும் வழக்கு விசாரணை முடியும்வரை நீடிக்கப்பட்டது.

வழக்காளிகள் சார்பில் சட்டத்தரணிகள் எஸ். ஆர். கனகநாயகம், என். பத்மநாதன், செ. கோடீஸ்வரன் ஆகியோர் சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியத்தின் அனுசரணை

(8-ம் பக்கம் பார்க்க)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "6 கோடி அரேபியருக்கு 20 நாடுகள் 6கோடி தமிழருக்கு ஒருநாடுமில்லையே'

## — எதிர்க்கட்சி முதல்வர்

(மாவிட்டபுரம்)

"ஒரு இனம் தனக்கே உரித்தான பாரம்பரியம், பண்பாடு என்பவற்றில் மறுமலர்ச்சி அடைவதுதான் உண்மையான மறுமலர்ச்சியாகும். மறுமலர்ச்சி என்று கூறி வேற்று நாகரிகங்களுக்கு உட்படுவது இனத்தின் தனித்துவத்தைப் பாழ்படுத்திவிடும். ஆகவே தொன்மை வாய்ந்த தமிழர் நாகரிகத்தைத் தமிழ்மக்கள் வளர்த்தெடுப்பதே தமிழ் இனத்தின் வாழ்வுக்கு வழி சமைக்கக்கூடியது''.

இவ்வாறு மாவை பாரதிமறுமலர்ச்சி மன்ற வெள்ளிவிழாவில் பிரதம அதிதியாகக்கலந்து கொண்டு உரையாற்றிய எதிர்க்கட்சி முதல்வரும், காங்கேசன்துறைப் பிரதிநிதியுமான திரு. அ. அமிர்தலிங்கம் கூறினர்.

திரு. இ. மு. நாகலிங்கம் தலைமையில் மன்ற அரங்கில் நடந்த இவ்விழாவில் அவர் மேலும் கூறியதாவது:



"தமிழ்மக்கள் மத்தியில் பிளவுகள் இருப்பதால்தான் நாம் முன்னேறமுடியாமலிருக்கிறோம். உலகில் சுமார் பதினைந்து நாடுகளில் தமிழன் வாழ்ந்தாலும் தமிழனுக்கென நாடு ஒன்று இல்லை. ஆறுகோடி தமிழர் உலகில் சொந்த நாடின்றி வாழ்கிறோம். ஆனல் உலகிலுள்ள ஆறு கோடி அரேபியர் 26க்கு மேற்பட்ட நாடுகளில் வாழ்கிருர்கள். இந்த நிலையை நாம் சிந்திக்கவேண்டும். எமது ஒற்றுமையைக் குலையாமல் கட்டிவளர்க்க வேண்டும்'' என்ருர்.

வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசுவும் பேசினர்.

வெள்ளிவிழாமலரை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி வெளியிட்டு வைக்க சட்டத்தரணி செ. புண்ணியமூர்த்தி முதற் பிரதியைப் பெற்றுக்கொண்டார்.

வெள்ளிவிழாவையொட்டி மாணவ, மாணவியர்களிடையே நடத்தப்பட்டபோட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம்பரிசில்கள் வழங்கினர்.

கலைநிகழ்ச்சிகளும் நடந்தன.

(அ)

## மின்சாரம் தாக்கி மரணம்!

(யாழ்ப்பாணம்)

மின்சாரத்தினுல்தாக்குண்ட வயோதிபமாது ஒருவர் அவ்விடத்திலேயே மரணமானர். அம்மாது மரணமான இடத்தில் நாய் ஒன்றும் மின்சாரத்தினுல் தாக்குண்டு பிணமாகக் கிடக்கக்காணப்பட்டது.

இப்பரிதாப சம்பவம் யாழ். நக்கா ரேட்டில் நிகழ்ந்தது.

மரணமான ஆசைப்பிள்ளை மகேஸ்வரி என்பவரின் மரண விசாரணை அவாது இல்லத்தில் நடைபெற்றபோது டாக்டர் பிளைக், எதிர்வீட்டுக்காரரான திரு. ஹென்ஸ்மன், திரு. ஆசைப்பிள்ளை ஆகியோர் சாட்சியமளித்தனர்.

சம்பவதினம் அதிகாலை 5-30 மணியளவில் கணவன் நித்திரைவிட்டு எழுந்தபோது 'ஐயோ' எனக் குளறும் சத்தம் கேட்டதென்றும் அப்போது மனைவியைக் கட்டிலில் காணுதுபோகவே வெளியில் சென்று பார்த்தபோது மனைவி மின்சாரத்தால் தாக்குண்டு மரணமாகி கிடக்கக் காணப்பட்டாரென்றும், மரணமான இடத்தில் நாய் ஒன்றும் இறந்துகிடக்கக் காணப்பட்டதென்றும் மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். பிரான்சிஸ் பொறியியலாளர் ஒருவரை வரவழைத்து அவ்விடத்தைச் சோதனையிட்டபோது அவ்விடத்தில் மின்சாரம் பாய்ந்து கொண்டிருந்தது தெரியவந்தது. அதைபடுத்து விபத்து மரணமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது. கான்ஸ்டபிள் திரு. எம். ஐயாத்துரை சாட்சிகளை ஆஜர்செய்தார்.

(கொ)

## தனிச்சிங்களத்தில் புதிய விலைப்பட்டியல்

(பண்டத்தரிப்பு)

யாழ் மாவட்டத்திலுள்ள பாவனையாளர் பாதுகாப்பு சங்கங்களுக்கு பொருட்களின் புதிய விலைப்பட்டியல் பற்றிய விபரங்களை கொழும்பிலுள்ள விற்பனைத்திணைக்களம் தனிச்சிங்களமொழியில் அனுப்பி வைத்துள்ளது!

புதிதாக விலைநிர்ணயம்செய்யப்பட்ட பொருட்களின் விபரங்களையும் புதிய விலைகளையும் குறிக்கும் இப்பட்டியல் தனிச்சிங்களத்தில் இருப்பதினுல் அதை வாசித்து விளங்கிக் கொள்ள முடியாது இருப்பதாகவும் கவலைதெரிவிக்கப்படுகிறது,

தமிழ்ப்பகுதியிலுள்ள பாவனையாளர் சங்கங்களுக்கு தமிழ்மொழியிலான விலைப்பட்டியலை அனுப்பவகை செய்யுமாறு பண்டத்தரிப்பு பாவனையாளர் சங்கத்தின் செயலாளர் திரு. என். எம். கந்தசாமி விற்பனைத்திணைக்கள ஆணையாளர் திரு. எம். இராமலிங்கத்திற்கு எழுதியுள்ள கடிதம்ஒன்றில் வேண்டியுள்ளார்.

## "உழைக்கும் மக்களுக்கே கலைஇலக்கியம் சொந்தம்"

(யாழ்ப்பாணம்)

'நாளாந்த வாழ்வின் அவலங்களைப் புரிந்துகொண்டு, சுபிட்சம்மிக்க எதிர்காலத்தை உருவாக்க, அதற்காக உழைக்க மாணவர்கள் முன்வரவேண்டும்' முடியாது என்று நினைப்பதுசோம்பேறித்தனம். பாடக் கொப்பிகளைச் சுமப்பதோடு மட்டும் நில்லாது வாழ்வுக்குத் தேவையான- சமுதாயத்திற்கு நன்மை பயக்கக்கூடியஅத்தனையையும் படித்துக்கொள்ள வேண்டும் பாடசாலையில் மாணவர்கள் ஒன்றுசேர்ந்து போட்டிகளில் கலந்துகொள்வது, பேசுவது, எழுதுவது கலை இலக்கியத்துறையில் ஆர்வம் காட்டுவது எதிர்காலத்தில் அவர்களது முன்னேற்றத்திற்குக் கைகொடுக்கும்.'

இவ்வாறு மக்கள் கலை இலக்கியப் பெருமன்றச் செயலாளர் டாக்டர் வி. ரி. இளங்கோவன் நாவாந்துறை ரோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலய உயர்தர மாணவர் மன்ற விசேட கூட்டத்தில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

செல்வி என். மிக்கேலம்மா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் டாக்டர் இளங்கோவன் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

'ஈழத்துக் கலை இலக்கியத் துறையின் வளர்ச்சி தமிழகத்தாரைச் சித்திக்கவைத்துள்ளது வாய்ப்பு, வசதியின்மை, பொருளாதார நெருக்கடிகளின் மத்தியிலும் ஈழத்துக் கலை இலக்கியப் படைப்பாளிகள் தரம்மிக்க படைப்புகளை அளித்துவருகிருர்கள். உழைக்கும் மக்களின் பிரச்னைகளையும் அவலங்களையும் எமது படைப்பாளிகள் நல்ல முறையில் சித்திரிப்பதோடு அவற்றின் அடிப்படைக் காரணங்களை தீர்விணக்கூடத் தெளிவுபடுத்துகிருர்கள். கலை இலக்கியம் பட்டப் படிப்பாளர்களுக்கும் கலாநிதிகளுக்கும், விமர்சன மேதைகளுக்கும் மட்டும் சொந்தமானதல்ல, அது சாதாரண உழைக்கும் மக்களுக்கே உரியது. சாதாரண மக்கள் மத்தியில் வாழ்ந்து அவர்களது இன்ப துன்பங்களைப் பார்த்து, அனுபவித்து, உணர்ந்துகொள்பவர்களால் மட்டுமே சிறந்த மக்கள் இலக்கியம் படைக்க முடியும்- விமர்சிக்க முடியும். மண்டபங்களின் நான்கு சுவர்களுக்கு மத்தியிலிருந்துவிட்டு இலக்கியம், அரசியல், மற்றும் கலைகள்பற்றிமேலெழுந்தவாரியாக விமர்சனம்செய்பவர்கள் காலகதியில் தூரவீசப்படுவார்கள். இவற்றினை மாணவர்கள் நன்குணர்ந்திடவேண்டும்.'

இறக்குமதியாகும் நச்சுஇலக்கிய ஆபாசக்குப்பைகளைத் தூரவீசி எம்மவரது படைப்புகளைத் தொடர்ந்து படியுங்கள்-ஆதரவு அளியுங்கள்' என்ருர்.

ஆசிரியர் எஸ். மனுவல், செல்வி பி. யோன் ஒவ் ஆர்க், செல்வன் எம். பகத்சிங் ஆகியோருட்படப் பலர் இக்கூட்டத்தில் உரை நிகழ்த்தினர். மாணவர் மன்றத்தின் சார்பில் விரைவில் சஞ்சிகையொன்றினை வெளியிடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. (அ)


# நெல் விளைச்சல் பெருக நிலையான துணை

# ஸ்டாம் F 34

குதிரைவாற்புல், கடுக்கன்புல், சந்தனக் கோரை முதலாம் நெற்களைகளை அறவே ஒழித்துக்கட்ட வல்லது ஸ்டாம் F-34.

3, 4 டீபீஏ கொண்ட ஸ்டாம் F-34 நெல் வயலில் நெல்லுடன் வளரும் சகல புற்கள், கோரைகளையும் அழிக்கும். குறிப்பாக, குதிரை வாற்புல், கடுக்கன் புல், சந்தனக் கோரை, மும்மூட்டுக் கோரை, நெற்சப்பி போன்றவற்றைக் கட்டுப்படுத்துவதில் மிகச் சிறந்தது.




## ஸ்டாம் F 34

உங்கள் நெல் வயலில் ஸ்டாம் F -34 பாவித்தால் விளைச்சல் பெருகி அதிக லாபம் கிடைப்பது உறுதி.

TAL 5920

CIC கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ் (கொழும்பு) லிமிட்டெட்
ஹேமாஸ் கட்டிடம், பிரிஸ்டல் வீதி, கொழும்பு 1.

| நிகர அளவு | | சில்லறை விலை |
|---|---|---|
| 3.25 | லீட்டர் கொள்கலம் | ரூ. 260/60 |
| 450 | மி. லீ. போத்தல் | ரூ. 38.75 |


## ரயிலுக்குப் பலி!

(யாழ்ப்பாணம்)

ரயில் தண்டவாளத்தைக் கடக்க முயன்ற ஒருவர் ரயிலால் மோதுண்டு அபாயகரமான நிலையில் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டு மரணமானர். இச் சம்பவம் யாழ். ரயில் நிலையத்திற்கும் கொக்குவில் ரயில் நிலையத்திற்குமிடையில் நிகழ்ந்துள்ளது.

இவ்விபத்தில் சிக்கி மரணமான பூச்சி ஆறுமுகம் (57 வயது) என்பவரின் மரணவிசாரணை யாழ். ஆஸ்பத்திரியில் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். பிரான்சிஸ் முன்னிலையில் நடைபெற்றபோது மரணமானவரின் மகள் திருமதி காளிமுத்து செம்பகவல்லி, ரயில் சாரதி அந்தோனிப்பிள்ளை ஆரோக்கியம் ஆகியோர் சாட்சியமளித்தனர்.

மரணமானவர் ரயில் தண்டவாளத்தைக் கடக்கமுற்பட்டதைக் கண்ட ரயில் சாரதி பலமுறை விசிலடித்துங்கூட அதைக் கவனியாது தண்டவாளத்தைக் கடக்க முற்பட்டபோதே விபத்து நிகழ்ந்தது என்றும் விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது. யாழ். ஆஸ்பத்திரி பொலிஸ் பொறுப்பதிகாரி திரு. எம். ஐயாத்துரை சாட்சிகளை ஆஜர் செய்தார். விபத்து மரணமெனத் தீர்ப்பு வழங்கப்பட்டது. (கொ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 930
சனி, ஞாயிறு 2-15
ரஜனிகாந்த் - படாபட் ஜயலக்ஷ்மி
ஆறிலிருந்து அறுபதுவரை



ஹரன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-பத்மினி
விஜயா-நாகேஷ்
பாலாடை



வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30,
சனி-ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
அரசகட்டளை


## விநியோகம்

(நெல்லியடி)

உடுப்பிட்டித் தேர்தல் தொகுதியில் மின்சார விநியோகம் செய்யப்படவுள்ள இடங்களை உடுப்பிட்டி பாராளுமன்ற உறுப்பினர் திரு. த. இராசலிங்கம் இலங்கை மின்சாரசபை பொறியியலாளர் திரு. பா. செல்வரட்ணம் ஆகியோர் பார்வையிட்டுள்ளார்கள். (ஈ)

## யுத்தத்திற்கு...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சகல சட்டபூர்வமான உரிமைகள் அங்கீகரிக்கப்படுவதும், சகல அமெரிக்க துருப்புகளும் யுத்தக்கப்பல்களும் இப்பிராந்தியத்திலிருந்து வெளியேறுவதும் அமெரிக்கத்தளங்கள் கலைக்கப்படுவதுமே மத்திய கிழக்குச் சமாதானத்துக்கு கிழிகோலும் அடிப்படையாகும் என்றும் ஜனைப் அரபாத் தமது அறிக்கையில் தெரிவித்தார்.

## இன்று கலைவிழா

(புலோலி)

வல்வெட்டித்துறை இந்து தமிழ்க்கலவன் பாடசாலையின் கலைவிழா இன்று புதன்கிழமை பாடசாலை அதிபர் திரு. எஸ். கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறவிருக்கிறது.

இக்கலைவிழாவில் கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த உயரதிகாரிகள் பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.

## கவிதை, கட்டுரைப் போட்டிகள்

(நெல்லியடி)

இலங்கைத் தமிழாசிரியர் சங்கம் தனது அங்கத்தவர்களிடையே கவிதை, கட்டுரைப் போட்டிகளை நடாத்தவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை மேற்படி சங்கத்தின் கல்வி கலாச் ாரசபை கவனித்து வருகின்றது.

போட்டிகளில் பங்கு பற்றி முதல் மூன்று இடங்களையும் பெறுவோருக்கு தங்க, வெள்ளி, வெண்கலப் பதக்கங்கள் வழங்கப்படும். என கல்வி கலாச்சார சபைச் செயலாளர் திரு. ஆ. க. மாணிக்கம் தெரிவித்துள்ளார்.

## பரிசு பெற்றனர்

(யாழ்ப்பாணம்)

காரை மறுமலர்ச்சி மன்றம் மாதாமாதம் நடாத்திவரும் பொதுஅறிவுப் போட்டித் தொடரின் செப்டம்பர்மாதப் போட்டியில் திரு. ப. தேவராசா, திரு. சி. பழனிமலை, செல்வன் ந. ஞானசுதன் ஆகியோர் பரிசுபெற்றனர்.

(கொ. இ)


மனோகரா (யாழ்ப்பாணம்).
தினசரி 4 காட்சிகள்
CHARLES BRONSON in
FROM NOON TILL THREE
Color
(Strictly for Adults)
எதிர்பாருங்கள்
ஒரேவானம் ஒரேபூமி



வசூலில் பெரும் சாதனை! 3-வது வெற்றி வாரம்!
ஆஹா! இது என்ன பெண்கள் கூட்டம்? பெண்குலத்தின் பெருமையை எடுத்துக் காட்டும் கோகிலா. தமிழ் வசனநடைக்கு பெருமை தேடித்தந்த கலைஞர் கருணாநிதி இவர்களைக் காண ராஜா வெண்திரையை நாடுங்கள். 20 நாட்களில் 1 லட்சம் பேர் பார்த்துவிட்டனர். இடத்துக்கு முந்துங்கள்.
இப்படத்திற்கு மாதர்கள் தரும் ஆதரவிற்கு நன்றி
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
கலைஞர் கருணாநிதியின் கைவண்ணத்தில் உருவான வசனம்.
ஜெய்சங்கர்-ஜெயசித்திரா—அசோகன்
மற்றும் பலர் நடித்த
வண்டிக்காரன் மகன்
(ஈஸ்மன் கலர்)



யாழ் மாவட்டத்திலுள்ள
ஹொண்டா (HONDA)
பிரியர்களுக்கு
ஓர் நற்செய்தி! ஓர் நற்செய்தி!!
புத்தம் புதிய ஹொண்டா (HONDA) மோட்டார் சைக்கிள்களை
பருத்தித்துறை மெயின் வீதியில் உள்ள
மாருதி மோட்டார் கம்பனியில்
பெற்றுக்கொள்ளலாம்.
அரிய சலுகை! அரிய சலுகை!!
தற்சமயம் கையிருப்பிலுள்ள
C 90 Z 2 ரூபா 9,750–00 )
C 70 Z 2 ரூபா 8,750–00 )
விலைகளில் பெற்றுக்கொள்ளலாம்
மற்றும்
CD 70, Benly Super, CG 125
NC 50 (Honda Express) CB 125 N
CB 125 T, CD 200, CB 250 N
முதலிய மோட்டார் சைக்கிள்கள் கொழும்பிலுள்ள
தலைமைக் கம்பனி விலைக்கே
உடன் பெற்றுக்கொள்ளலாம்.
HONDA EXPRESS தவிர்ந்த சகல வித மோட்டார் சைக்கிள்களுக்கும் இலவசமாக
ஒவ்வொரு தலைக்கவசமும் கண்ணாடியுடன்
(Helmet with Visor) கொடுபடும்.
சகல வித மோட்டார் சைக்கிள்களுக்கும் கொழும்பிலிருந்து இங்கு கொண்டு வரும் போக்குவரத்துச் செலவும் வாடிக்கையாளரின் நன்மை கருதி அறவிடப்படமாட்டாது என்பதையும் மிகவும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.
ஆகவே
விரையுங்கள்! விரையுங்கள்!!
மாருதி மோட்டார் கம்பனி
(D. R. O. கந்தோருக்கு முன்பாக)
பிரதான வீதி, பருத்தித்துறை.
Stafford Motor கொம்பனியாரின் உத்தரவு பெற்ற வியாபாரிகள்.



ராணி - யாழ்ப்பாணம்
காலை 10-30, பி. ப. 2-30, 6-30, இரவு 9-45
கமலஹாசன் (இரு வேடங்களில்) ஸ்ரீப்ரியா
சட்டம் என் கையில்
(வயதுவந்தவர்களுக்கு மட்டும்)



வெலிங்டன்
(யாழ்நகர்)
தினசரி 3 காட்சிகள்
சனி-ஞாயிறு 4 காட்சிகள்
கே. பி. சுந்தராம்பாள்
ஔவையார்



லிடோ
(யாழ்நகர்)
Daily at: 10-30am, 2-15pm, 4-45 pm, 7-15 pm, & 9-30 pm
RIVER OF THE GREAT CAYMAN



வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி: 10-30, 1-30, 4-30, 7-00
சிவகுமார் — ஜெய்சித்திரா - ஜெயசுதா நடித்த
வெள்ளிக்கிழமை விரதம்



சாந்தி (யாழ்நகர்) போன்: 7642
தினசரி 4 காட்சிகள்
100-வது வெற்றித் திருநாளை நோக்கி......
"வெள்ளி விழா"
நீயா?
வண்ணச்சித்திரம்
Next Attraction: "THE DIRTY DOZEN"
எதிர்பாருங்கள்: திசைமாறிய பறவைகள்



ஸ்ரீதர் - யாழ்நகர்
தினசரி 10-30,, 2-30 6-30 & 9-45.
பலகால இடைவெளியின்பின் மக்கள் திலகத்தின் புதுப் படத்தினைக் காணும் சந்தர்ப்பம்!
புரட்சி நடிகர்
தமிழக முதல்வர்
எம்.ஜி.ஆர்.
புரட்சிக் கன்னி
லதா
வில்லனுக்கோர்
சக்கரவர்த்தி
நம்பியார்
நாகேஷ்,
தேங்காய்,
நிர்மலா,
கண்ணன்
வி. கே.
ராமசாமி
மற்றும் பலர்
நடித்த

மீனவ நண்பன்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஈழநாடு
The Eelanaadu 60 சதம்

# "மக்களுக்கு சேவை செய்வது கூ.சங்கங்களின் கடமை"

## – இராஜலிங்கம் எம். பி.

(நெல்லியடி)

'மக்களின் அன்றாட சேவைகளைப் பூர்த்திசெய்வதில் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடமைப்பாடு உண்டு. தனியார் துறையினருடன் போட்டியிட்டு மக்களுக்குச் சேவை செய்ய கூட்டுறவுத்துறைக்கு இப்பொழுது சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.,

மேற்கண்டவாறு உடுப்பிட்டி பாராளுமன்ற உறுப்பினர் திரு. த. இராசலிங்கம், உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கத்தின் மக்கள் கடை ஒன்றை, நாவலர் மடத்தில் திறந்து வைத்துப் பேசுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

'நாட்டில் பொருட்களின் விலைவாசி விஷம்போல் ஏறிவருகின்ற அதேநேரத்தில் பணத்தின் பெறுமதி பெருமளவில் வீழ்ச்சியடைகின்றது. மக்கள் பணத்தின் மீது கொண்டிருந்த நம்பிக்கையை இழந்துவருகின்ருர்கள். இந்த முக்கோணப் போராட்டத்தின் மத்தியில்தான் கூட்டுறவுத்துறை இயங்கவேண்டியுள்ளது.

'இன்றைய அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கை காரணமாக சகல வர்த்தக அபிவிருத்தித்துறைகளிலும் தனியாருக்குப் பூரண சுதந்திரம் கொடுக்கப்பட்டுள்ளது. இக்கொள்கையினுல் உள்ளூர் உற்பத்தி எவ்வளவு தூரம் பாதிக்கப்படுமென்பதை இன்னும் 10 ஆண்டுக் காலத்தில் பூரணமாக அறிந்துகொள்ள முடியும்.'

## இன்று

(ஏழிபுரம்(

குமரகுருபரசுவாமிகள் அருளிய சகலகலாவல்லிமாலை மனனப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வழக்கம்பரை அம்மன் கோவில் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. போட்டியில்பங்கு கொள்ள விரும்புவோர்கள் நேர்முகமாக வருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## மக்கள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கம் பெறவேண்டும். அதற்கு ஒரே ஒரு வழி பாராளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தலை நடத்துவதே''.

இவ்வாறு லங்கா-பாரத ஒற்றுமை முன்னனித் தலைவர் டாக்டர் ஆ. தர்மலிங்கம் விடுத்துள்ள பகிரங்க அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ப. நோ. கூ. சங்கத்தின் இயக்குநர் சபைத் தலைவர் திரு. சி. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இத் திறப்பு விழாவில் ஆசிரியர்களான திரு. கே. தாமோதரம்பிள்ளை, திரு. எஸ். சின்னத்தம்பி ஆகியோரும் உரையாற்றினுர்கள். (ஈ)

விஜயதசமியில்
படிப்பைத் தொடங்க
பாலர்கள் விரும்புவது
வண்ணத்தமிழ்
அரிச்சுவடி
அழகான வண்ணப்படங்களுடன்
விலை ரூபா 2-
காந்தளகம்
213, காங்கேசன்துற வீதி,
யாழ்ப்பாணம்.

## எஸ். டி. கூற்று

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்படத்தக்கதாகும்.

இவ்வாறு ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

''1983 ம் ஆண்டு ஸ்ரீ ல. சு. கட்சி ஆட்சிக்கு வநததும் பண்டா-செல்வநாயகம் ஒப்பந்தத்தை அமுல்படுத்துவோம் என்று தெரிவித்து தமிழ் மக்களை ஏமாற்ற முனைந்துள்ளார். மாவட்ட அபிவிருத்தி சபைச் சட்ட மூலம் பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு வந்தபோது ஸ்ரீ ல. சு. கட்சியின் சார்பில் பேசிய திரு. மைத்திரிபால சேனநாயக்கா, தற்போது அரசாங்கம் கொண்டுவந்துள்ள மாவட்ட சபை மசோதா, பண்டா - செல்வநாயகம் ஒப்பந்தத்திலும் கூடிய அதிகாரங்களை வழங்குகிறது. அதனை நாம் எதிர்க்கிருேம்.'' என்று கூறியிருந்தார். ஆனுல் அக் கட்சியிலுள்ள கம்பஹா எம். பி. யோ தமிழ்மக்கள் வாழும் பகுதியில் வந்து, அரசியல் இரட்டை வேடம் பூண்டு பேசியுள்ளார். தனது தொகுதியில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசிய கம்பஹா எம். பி. ''மாவட்ட சபைகள் இலங்கையைப் பிரிக்குமென சிங்கள மக்களிடையே இனவாதத்துக்கு தூபமிட்டு பேசியிருக்கின்ருர். யாழ்ப்பாணத்தில் மைத்திரிபாலசேனநாயக்காவின்கூற்றின்படி குறைந்த உரிமைகளை வழங்கும் பண்டா-செல்வா ஒப்பந்தத்தை தாம் அமுல்படுத்துவோமென்று பேசியது விந்தையாயிருக்கிறது.'' என்று தெரிவித்த பண்டிதர் கா. பொ. இரத்தினம் ''தமிழ் ஈழத்திற்காகப் போராடும்எங்களைப் பொறுத்தளவில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் 1972 ம் ஆண்டிலே நான் பாராளுமன்றத்தில் எடுத்துக்காட்டியதைப் போல் ஒரு குட்டையில் ஊறிய இரண்டு மட்டைகளேயாகும். எங்கள் நால்வருடைய (எதிர்க்கட்சித்தலைவர்திரு. அ.அமிர்தலிங்கம், பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம், ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம், சாவகச்சேரி எம். பி. திரு, வி. என். நவரத்தினம்) குடியியல் உரிமையை மட்டுமன்றி சொத்துக்களையும் பறிமுதல் செய்து 20 வருடச் சிறைக்கு அனுப்ப ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி முயன்றது எனினும், சிறிமாவின் பிறப்புரிமையான குடியுரிமையைப் பறிக்க முயல்வதை மனிதாபிமானத்துடன் நாங்கள் மும்மரமாக எதிர்க்கின்ருேம் என்பதையும் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்'' என்று தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (வெ)

## சாந்தி...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

யுடனும், எதிராளி கம்பெனி சார்பில் சட்டத்தரணிகள் சோமசுந்தரம், மகேந்திரராஜா ஆகியோர் சட்டத்தரணி சேவியரின் அனுசரணையுடன் ஆஜரானுர்கள்.

Hoechst

உலகில் இரசாயனப் பொருட்கள் தயாரிப்பதில் முன்னணியில் திகழ்கின்ற மேற்கு ஜேர்மனியைச் சேர்ந்த ''ஹேக்ஸ்ட்'' ஸ்தாபனத்தின் இலங்கைக் கிளை 1980-ம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் குடாநாட்டின் எல்லா பகுதிகளிலும் :

''ஹேக்ஸ்ட் விவசாய இரசாயன பொருட்களை''

சந்தைப்படுத்தி விநியோகம் செய்ய உள்ளது என்பதனை வாடிக்கையாளர்களுக்கும், பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கும், விவசாய சேவை நிலையங்களுக்கும், கமத்தொழில் திணைக்களத்திற்கும், தனியார் வர்த்தக நிலையங்கட்கும், பாவனையாளர்களுக்கும் மிகவும் மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்ருேம்.

எங்கள் ஸ்தாபனத்தின் பிரதிநிதிகள் முறைக்குமுறை உங்களிடம் வருகை தருவார்கள். மேலதிக விபரங்களுக்கும், இலவச ஆலோசனைகட்கும் தொடர்பு கொள்ளவும்.



INTASEL

ஹேக்ஷ்ட் (சிலோன்) கம்பனி லிமிட்டெட்.,
செயலகம், பண்டகசாலை
315, வக்சால் வீதி, கொழும்பு 2. தொலைபேசி: 23812.

## மரண அறிவித்தல்

### அம்பலவாணர் நடராசா

கிராமசேவையாளரும் (விதானையார்), தொழிற்சங்கவாதியும், சமூகத்தொண்டருமான வரணி திரு. அம்பலவாணர் நடராசா காலமாகிவிட்டார். இவர் இராசம்மாவின் அன்புக் கணவரும், ஸ்ரீ விஸ்வநாதன், ஸ்ரீ ரங்கநாதன், ஸ்ரீ ரஞ்சினி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னாரின் ஈமக்கிரிகைகள் இன்று புதன்கிழமை (15-10-1980) காலை 10 மணிக்கு நடைபெறும். இவ்வறிவித்தலை யாபேரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

7099

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுத்தது)
குறைந்த செலவில் நிறைந்த சேவை
புகைப்படப் பிரதி (போட்டோ கொப்பி)
எந்தச் சான்றிதழ், ஆவணங்கள், வரைபடங்கள் ஆயினும்
பிரதி செய்து கொடுக்கப்படும்.
பிரதி ஒன்றிற்கு - 75 சதம் மட்டும்
யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
பிரதான கிளை
மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்.
74/3, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(ஆஸ்பத்திரிக்குப் பின்புறம்)

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registred as a News Paper at General Post Office Sri Lanka under No. QB 948/78 The Eelanaadu P. B. No. 49, Tgrame Eelanaadu, Phone, 389.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org